35—

சேலம் அரசுக் கல்லூரிக்கு நூற்றாண்டு விழா நடத்துதல்

***26191*—திரு. மு. நடேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் அரசு ஆண்கள் கல்லூரி 115 ஆண்டுகள் ஆகியுள்ளதால், நூற்றாண்டு விழா நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் அரசுக் கல்லூரியானது மிகப் பழமையான கல்லூரி. மூதறிஞர் ராஜாஜி அவர்களும் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி விஜயராகவாச்சாரியார் அவர்களும் அந்தக் கல்லூரியில் பயின்று இருக்கின்றார்கள். ஆகவே, இதை மனதிலே கொண்டு 2, 3 ஆண்டுகளாக முயற்சி செய்து கொண்டு இருக்கின்றோம். எனவே, அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரி 1879-ம் ஆண்டிலே துவங்கப்பட்டது. 1979-லே அதற்கு நூற்றாண்டு விழா கொண்டாடியிருக்க வேண்டும். தற்போது 16 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இந்த விழா நடத்துவது ஏற்புடையது அல்ல. எனவே, தற்போது நூற்றாண்டு விழா நடத்துவதற்கான திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்றாண்டு விழா நடத்தவில்லை என்றாலும்கூட, அரசு அந்த மாதிரி கல்லூரிகளுக்கு சில சலுகைகளை அறிவித்துக் கொண்டிருக்கும், உதாரணமாக ஆடிட்டோரியம் போன்ற பணிகளை செய்து கொண்டிருக்கும், ஆகவே அது போன்ற பணிகளையாவது அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1995 நவம்பர் 7]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி முதல்வரிடத்திலிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டால், நிதிநிலை அடிப்படையில் அரசு அதை பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 36, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

36—

கண்டமங்கலம் ஒன்றியத்தில் கூட்டுறவு வங்கியில் கிளை

***79978*-திரு. வீ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், விழுப்புரம் வட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், சிறுவந்தாடு கிராமத்தில், தென்னாற்காடு-வள்ளலார் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. வீ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்று சொல்வதற்கே இடம் இல்லை என்று பொன்னான ஆட்சி செய்துவரும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் இல்லை என்று கூறிவிட்டார். சிறுவந்தாடு கிராமம் என்பதும் அதன் அருகே அமைந்துள்ள மோட்சகுளம் ஊராட்சியும் ஒரு சாலையின் இருமருங்கே அமைந்திருக்கிற ஒரு பேரூராட்சி அளவுக்கு ஜனத்தொகை கொண்ட ஒரு பகுதி ஆகும். மேலும் மோட்சகுளம் கிராமத்தில் லட்சுமி கூட்டுறவு பட்டு உற்பத்தி மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் ஒன்றும், அண்ணா கூட்டுறவு பட்டு நெசவு உற்பத்தி மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் ஒன்றும் ஆக இரண்டு சங்கங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தாலும், அங்கே